கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.
முன்னிலை – **திரு.எம்.விக்னேஷ் பிரபு, எம்.எல்.,**
**கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு.**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், 6ஆம் நாள் வெள்ளிக்கிழமை
I.A.No.5/2025 in O.S.No.34/2008

சாந்தி (எ) மீனாட்சி . . . மனுதாரர்கள்/5ம் பிரதிவாதி

/எதிராக/

1. ஆண்டாள்,
2. லலிதா,
3. மல்லிகா, . . . எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

4. கண்ணன் (இறந்துவிட்டார்)
5. பாலம்மாள்,
6. சீனுவாசன்,
7. நரேஷ்பாபு,
8. இணைசார்பதிவாளர் – 2,
அம்பத்துார்,
9. இணைசார்பதிவாளர் – 2,
திருவத்திபுரம். . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் 27.01.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராஜேஷ் அவர்கள் முன்னிலையாகியும் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையாகியும், 5 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கார்த்திகேயன் அவர்கள் முன்னிலையாகியும், 8, 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## உத்தரவு

மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.06 12:38:35 +0530

விதி 1A–ன் கீழ் தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்று வழக்கை மேல்நடத்த வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கில் 5ம் பிரதிவாதி என்றும், இம்மனுவில் மனுதாரர் என்றும், 1, 2, 3 எதிர்மனுதாரர்கள்/1, 2,3 வாதிகள் இம்மன்றத்தில் தாவா சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை கோரி வழக்கு தொடர்ந்துள்ளனர் என்றும், மனுதாரர் ஏற்கனவே பிரதிவாதிகள் தரப்பு சாட்சி 5 ஆக சாட்சியம் அளித்துள்ளதாகவும், மனுதாரர் தனது முதல்விசாரணையில் மிக தெளிவாக தாவா சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களை விற்பனை செய்து கிடைத்த தொகைகளை கொண்டு 1ம் பிரதிவாதி பெயரில் மற்றும் 2ம் பிரதிவாதி பெயரில் பொது குடும்ப சொத்தாக கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றும்,மேலும் கொடநகர் கிராம நஞ்சை சர்வேஎண்.305/2, 305/5, 16, 18, 476, 479 ஆகியவற்றிலிருந்த பூர்வீக சொத்துக்களை 1ம் பிரதிவாதி கிரையம் செய்து தாவா சொத்துக்களை மனுதாரர் பெயரிலும், மனுதாரரின் மனைவி 2ம் பிரதிவாதி பெயரிலும் பொது குடும்ப சொத்தாக கிரையம் பெறப்பட்டது என்றும், இச்சொத்துக்களில் 1ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட உரிமை ஏதும் கிடையாது என்று குறிப்பிட்டிருந்ததாகவும், மனுதாரர் முதல் விசாரணையில் தெளிவாக பூர்வீக சொத்துக்களை விற்பனை செய்து 1, 2 பிரதிவாதிகள் பெயரில் கிரையம் பெறப்பட்டது என்று கூறியதை மறுத்து மனுதாரர் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது கேள்விகள் கேட்கப்படவில்லை என்றும், ஆனால் பொதுவாக வழக்கு சொத்து 2ம் பிரதிவாதியும் என தந்தை கண்ணப்பிள்ளை ஆகியோர் கூட்டாக சேர்ந்து கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான் என்று



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.06 12:38:42 +0530

கேட்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது என்றும், தாவா 1 முதல் 7 வரையுள்ள சொத்துக்கள் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் 1992, 1993 ஆகிய ஆண்டுகளில் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றம், இச்சொத்துக்களில் கிரையம் வாங்குவதற்கு முன்பாக 1ம் பிரதிவாதி செய்யாறு கொடநகர் கிரமத்திலிருந்த பூர்வீக சொத்துக்களான சர்வே எண்.476, 479 மற்றும் 16/3 ஆகியவற்றை இளங்கோ, ஏழுமலை, ஆகியோர் பெயரில் பொது அதிகாரம் எழுதி கொடுத்து அதனடிப்படையில் 1992 முதல் பல்வேறு நபர்களுக்கு மனைபிரிவுகளாக கிரையம் செய்யப்பட்டது என்றும், அந்த கிரைய தொகைகளை கொண்டு தாவா 1 முதல் 7 வரையுள்ள அயிட்ட சொத்துக்கள் 1992 மற்றும் 1993 ஆண்டுகளில் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் கூட்டாக கிரையம் பெறப்பட்டது என்றும், 1, 2 பிரதிவாதிகள் பெயரில் தாவா 1 முதல் 7 வரையுள்ள அயிட்ட சொத்துக்கள் கிரையம் பெற்றதற்கான கிரைய பத்திர சான்று நகல்கள் வாதிகள் தரப்பில் வா.த.சா.ஆ.1 முதல் 5 வரை ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்சொன்ன சொத்துக்கள் கிரையம் பெறுவதற்கு முன்பாக பூர்வீக சொத்துக்களான கொடநகர் கிராம சர்வே எண்.16/3 குறித்த 01.01.1992 முதல் 15.08.2012க்கான வில்லங்கசான்று மற்றும் சர்வே எண்.476, 479 ஆகியவை குறித்த 01.01.1991 முதல் 15.08.2012க்கான வில்லங்கச்சான்று ஆகியவற்றை தற்போது தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்சொன்ன வில்லங்கச்சான்றுகளை மனுதாரர் தாக்கல் செய்திருந்த அ.வ.எண்.77/1999 என்ற வழக்கில் தாக்கல் செய்வதற்காக சார்பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்கச்சான்று பெற்றிருந்ததாகவும், பின்னர் அந்த வழக்கு வாபஸ் பெற்று கொண்டதால மேற்சொன்ன வில்லங்கசான்றுகள் கைசேர்ந்திருந்தது என்றும், தற்போது அதனை தேடி எடுத்து தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி ஆவணங்களை



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.06 12:38:47 +0530

தாக்கல் செய்வதில ஏற்பட்ட காலதாமதம் தெய்வாதீனமானதும் என்றும், மன்னிக்ககூடியதாகும் என்றும்,மேற்சொன்ன ஆவணங்கள் இந்த வழக்கிற்கு மிகவும் அத்தியாவசிமானதாகும் என்றும், இவைகளை தாக்ல்ல செய்தால் தான் மனுதாரர் தரப்பு நியாயத்தை தெளிவுபடுத்த முடியும் என்றும், எனவே ஆவணங்களை காலதாமதமாக தாக்கல் செய்வதை மன்னித்து கூடுதல் ஆவணங்களை ஏற்க வேண்டி மனுதாரர் பரம் மனு தாக்கல்.

**3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்யும் ஆட்சேபணையின் சுருக்கம்**

மனுதாரரின் மனு பொய்யானது, மோசவிதமானது என்றும், சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும் என்றும், எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், மனுதாரரின் மனு சங்கதிகளான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது பூர்வீக சொத்துக்களை விற்பனை செய்து 1, 2 பிரதிவாதிகள் பெயரில் கிரையம் பெறப்பட்டது என்று கூறியதை மறுத்து கேள்விகள் கேட்கப்படவில்லையென்பதும் பொதுவாக வழக்கு சொத்து 2ம் பிரதிவாதியும், என் தந்தையும் கூட்டாக சேர்ந்து கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான் என்று கேட்கப்பட்டு பதிவு செய்யப்பட்டதாகவும், இதன் காரணமாக பூர்வீக சொத்துக்களான வில்லங்கச்சான்றுகளை அசல் வழக்கு எண்.77/1999 லிருந்து நகல் பெற்று தாக்கல் செய்வதாகவும் அதை குறியீடு செய்வதற்காக பிரதிவாதி தரப்பு சாட்சி 5ஆன மனுதாரரை ரீக்கால் செய்யக்கோருவது ஏற்கக்கூடியதல்ல. ஏனெனில் மனுதாரரை எந்த வகையில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்று கூற அவருக்கு எந்த தகுதியும் இல்லை ஏனெனில் இக்கவுண்ட்டர் மனுதாரர் தரப்பு கேட்கப்பட்ட கேள்விகளை ஒப்புக்கொண்ட நிலையில் தற்போது அதை



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.06 12:38:54 +0530

மாற்றி சாட்சியம் அளிக்கப்போவதாகக் கூறுவது தன்னுடைய வாக்குமூல பிழைகளை திருத்திக்கொள்வதற்கானதாகும்.மேற்படி மனுதாரர் தன்னுடைய வழக்கான அசல் வழக்கு எண்.77/1999 ஐ வாபஸ் பெறும்போது மேற்படி வழக்கில் வாதிக்கு என்ன பரிகாரமோ அதைத்தான் பெறுவதாகக்கூறிவிட்டு வழக்கை வாபஸ் பெற்று தற்போது புதியதாக ஒரு வழக்கை நடத்திக்கொண்டு அதற்கு சான்றாவணங்களை எதிருரையில் கூறாமல் சாட்சியம் அளித்துவிட்டு தற்போது தாக்கல் செய்யப்போவதாகக்கூறுவது ஏற்புடையதல்ல என்றும், மேற்கண்ட காரணங்களை அனுசரித்து மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்து இவ்எதிர்மனுதாரருக்கு செலவு தொகை அளித்து உத்தரவிட வேண்டி 5ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதி பரம் எதிருரை தாக்கல்.

4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் அசல் வழக்கில் 5ம் பிரதிவாதியும், எதிர்மனுதாரர்கள் வாதிகளும் ஆவார்கள். எதிர்மனுதாரர்கள் வாதிகளாக இருந்து பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை வேண்டி அசல் வழக்கினை தாக்கல் செய்தார்கள். அசல் வழக்கானது வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டும், 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டும், 5ம் பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணைக்காக நிலுவையிலிருந்து வரும் நிலையில் மனுதாரர் 5ம்

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.06 12:38:59 +0530

பிரதிவாதியான பி.சா.5ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்து 5ம் பிரதிவாதி தாக்கல் செய்த கூடுதல் ஆவணங்களை ஏற்று அசல் வழக்கினை மேல்நடத்த வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கானது 2008ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 5ம் பிரதிவாதியான பி.சா.5 16.09.2025 அன்று முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளார். பி.சா.5ஐ வாதிகள் தரப்பில் 07.10.2025 தேதியன்று 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டு 4 பக்கங்கள் குறுக்குவிசாரணை சாட்சியமானது பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் மனுவில் தெரிவித்துள்ள 2 ஆவணத்திற்கும், இவ்வழக்கிற்கும் என்ன தொடர்பு என்பது குறித்து மனுதாரர் தன் மனுவில் விவரித்து எதுவும் கூறவில்லை. மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள 29.08.2012 மற்றும் 30.08.2012 தேதியிட்ட வில்லங்கச்சான்றிதழ் பி.சா.5 இந்நீதிமன்றத்தில் விசாரணை செய்வதற்கு முன்னரே பெறப்பட்ட ஆவணங்களாகும். அந்த ஆவணங்கள் வழக்கிற்கு மிக முக்கியமான ஆவணங்கள் எனும்பட்சத்தில் 5ம் பிரதிவாதியான பி.சா.5 விசாரணை செய்யும்போதே 5ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்து குறியீடு செய்திருக்க வேண்டும். ஆனால் 5ம் பிரதிவாதி தரப்பில் பி.சா.5 விசாரணை செய்யப்பட்டு 2 முதல் 4 பிரதிவாதிகள் தர்பில் முழுமையாக குறுக்குவிசாரணை செய்யப்பட்டதற்கு பின்னர் மேற்படி கூடுதல் ஆவணங்களை ஏற்று அசல் வழக்கினை மேல்நடத்த வேண்டும் என்று மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்புடையதாக இல்லை. மேலும் அசல் வழக்கானது 5ம் பிரதிவாதி தரப்பு சாட்சிய விசாரணைக்காக நிலுவையிலிருந்து வருவதாலும், அசல் வழக்கானது 2008ம் ஆண்டு தாக்கல் செய்யப்பபட்டு கடந்த 17 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையிலிருந்து வருவதாலும், அசல்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.06 12:39:06 +0530

வழக்கினை விரைந்து முடித்துதிடும் பொருட்டும், மனுதாரர் அசல் வழக்கின் விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனையை ஏற்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை அனுமதிப்பதற்கு எந்தவொரு முகாந்தரமும் இல்லை என்பதால் மனுதாரர் தரப்பில் பி.சா.5ஐ மீண்டும் அழைத்து மனுதாரர் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணங்களை ஏற்று அசல் வழக்கினை மேல்நடத்த வேண்டும் என்று மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இறுதியாக மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது செலவுதொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் 2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம்6–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.06 12:39:12 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை**
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை**

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.06 12:39:18 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.